டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in

கல்யாண் ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 8.10.2026 வியாழக்கிழமை | பக்கங்கள் 27 | RNI No.TNTAM/2012/49602 | Vol.14, Issue : 092 | Madurai | Online Edition

# பருவநிலை மாற்றத்தால் ஏற்படும் கடும் சவால்களை எதிர்கொள்ள தயாராக வேண்டும்




புது தில்லி, அக்.7

ஐநா பருவநிலை மாற்றம் தொடர்பான மாநாடு, துருக்கியில் உள்ள ஆண்டால்யாவில் நவம்பர் மாதம் நடைபெற உள்ளது. இதன் முன்னோட்டமாக, பிஜியில் நடைபெற்ற ஆலோசனை கூட்டத்தில் இந்தியா, ஆஸ்திரேலியா, பிஜி, துவாலு ஆகிய நாடுகளை சேர்ந்த பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். இந்தியா சார்பில் மத்திய சுற்றுச்சூழல் வனம், பருவநிலை மாற்றம் துறை அமைச்சர் புபேந்தர் யாதவ் பங்கேற்றார். இதில், பருவநிலை தொடர்பான பாரீஸ் ஒப்பந்தத்தில் உள்ள முக்கிய அம்சங்களை செயல்படுத்துவது குறித்து விவாதிக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் பேசிய மத்திய அமைச்சர் புபேந்தர் யாதவ், துவாலு நாட்டு மக்கள், பருவநிலை மாற்றத்தின் சவால்களை துணிவுடன் எதிர்கொண்டு முன்மாதிரியாக விளங்குகிறார்கள் என புகழாரம் சூட்டினார். பருவநிலை தொடர்பான பாரீஸ் ஒப்பந்தத்தை தொலைநோக்கு பார்வையுடன் அனைவரும் ஒன்றிணைந்து செயல்படுத்த வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார். சர்வதேச அளவில் வெப்பநிலையானது சராசரி அளவைவிட 1.5 டிகிரி செல்சியஸ் உயர்ந்துள்ளதை சுட்டிக் காட்டிய அமைச்சர் புபேந்தர் யாதவ், வெப்பத்தின் தாக்கத்தை குறைப்பதற்கான இலக்கை நிர்ணயித்து செயல்படுத்த வேண்டும் எனவும் தெரிவித்தார். இந்த ஆலோசனை கூட்ட மானது துருக்கியில் நடைபெறவுள்ள ஐநா பருவநிலை மாநாட்டிற்கு முன்னோட்டமாகவும் பயனுள்ளதாகவும் அமைந்துள்ளது என்றும் கூறினார்.

# ஒருங்கிணைந்த பண்ணையம் மற்றும் உள்நாட்டு கூட்டின மீன் வளர்ப்பு வெளிவளாக பயிற்சி



கடலூர், அக்.7

கடலூர் மாவட்டம், பரங்கிப்பேட்டை வட்டாரத்தில் 07.10.26 அன்று ஒருங்கிணைந்த பண்ணையம் மற்றும் உள்நாட்டு கூட்டினமீன் வளர்ப்பு மற்றும் மதிப்பு கூட்டுதல் பற்றிய வெளிவளாக பயிற்சி நடைப்பெற்றது.

இப்பயிற்சியை திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் க.நடராஜன் பயிற்சியினை தொடங்கி வைத்து வரவேற்புரை வழங்கி நபார்டு திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட முழு மாதிரி செயல் விளக்கதிடல் மற்றும் ஒருங்கிணைந்த பண்ணையத்தில் மீன் வளர்த்தல் செயல்முறைகள் மற்றும் மீன் வளர்ப்பில் அசோலாவின் முக்கியத்துவம் பற்றி தெளிவாக எடுத்துரைத்தார்.

மேலும் பரங்கிபேட்டை வட்டாரத்தின் மீன்வள ஆய்வாளர் முனைவர் கார்த்திக், ஒருங்கிணைந்த பண்ணையில், கிப்ட் திலாப்பியா மீன் குஞ்சு வளர்ப்பு முறை, விரால் மீன் குஞ்சு வளர்ப்பு முறை, கூட்டின மீன் வளர்ப்பு முறை , மீன் வளர்ப்பில் தீவனம், ஊட்டச்சத்து மேலாண்மை மற்றும் மதிப்புகூட்டுதல் பற்றியும் தெளிவாக எடுத்துரைத்தார். திவ்யகுமாரி, மீன்வள ஆய்வாளர், மீன் வளர்ப்பில் நீர் தர மேலாண்மை மற்றும் மீன்களில் ஈடுப்பட்டுள்ள அரசு திட்டங்கள் பற்றி தெளிவாக எடுத்துரைத்தார்.

இப்பயிற்சியில் கடலூர் மாவட்டம், பரங்கிப்பேட்டை வட்டாரத்தை சேர்ந்த 30க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்துக் கொண்டு பயன் பெற்றனர்.

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

# சமச்சீர் உரப்பயன்பாடு மற்றும் உரப்பயன்பாட்டுத்திறன் குறித்த மாவட்ட அளவிலான விவசாயிகள் பயிற்சி



மதுரை, அக்.7

மதுரை மாவட்டம், கள்ளிக்குடி வட்டாரம், வேளாண்மைத் துறையின் வேளாண்மைத் தொழில்நுட்ப மேலாண்மை முகமைத் திட்டத்தின் கீழ் கள்ளிக்குடி பிட் 1 கிராமத்தில் சமச்சீர் உரப்பயன்பாடு மற்றும் உரப்பயன்பாட்டுத்திறன் குறித்த மாவட்ட அளவிலான விவசாயிகள் பயிற்சி நடைபெற்றது.

இப்பயிற்சியினை கள்ளிக்குடி வட்டார அட்மா திட்ட ஒருங்கிணைப்பாளர் ஜெ.சந்திரகலா துவக்கி வைத்து உரப் பயன்பாடு குறித்து விவசாயிகளிடம் விளக்கினார். பிஜி கிராப் சயின்ஸ் தனியார் உர நிறுவன ஆராய்ச்சியாளர் பத்மபிரியா, பயிர் வாரியாக சாகுபடிக்கேற்ற உரங்கள் மற்றும் மண் மாதிரியின் பரிசோதனை அடிப்படையில் உரங்களை எவ்வாறு பயன்படுத்துவது என்பதும் குறித்து விளக்கமளித்தார். இப்பகுதி உதவி வேளாண்மை அலுவலர் திவ்யா, வேளாண்மைத் துறையில் மானியத்தில் பயிர்களுக்கு வழங்கக்கூடிய உரங்களை பற்றி விளக்கினார். வட்டார தொழில்நுட்ப மேலாளர் இந்திராதேவி, உயிர் உரங்கள் பயன்படுத்துவது பற்றியும், நுண்ணூட்டச்சத்து உரப்பயன்பாட்டினையும் பற்றி விளக்கினார்.

இப்பயிற்சியில் 40 விவசாயிகள் கலந்து கொண்டனர். இப்பயிற்சிக்கான ஏற்பாடுகளை லாவண்யா மற்றும் யுவராஜ் குமரன் ஆகியோர் செய்திருந்தனர்.

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily

KALYAN JEWELLERS

# எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

சிறப்புச்சலுகை



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது **அக்ரி டாக்டர் வாசகர்** என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

# கெங்கவல்லி வட்டாரத்தில் பயிர் காப்பீடு செய்ய விவசாயிகளுக்கு அழைப்பு!

சேலம், அக்.7

சேலம் மாவட்டம், கெங்கவல்லி வட்டாரத்தில் மக்காச்சோளம், பருத்தி, நெல் சம்பா சாகுபடி செய்துள்ள விவசாயிகள் பயிர் இன்ஷூரன்ஸ் செய்து பயன்பெற அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து வேளாண்மை உதவி இயக்குனர் மோகன சரிதா வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில், கெங்கவல்லி வட்டாரத்தில் 2026-27 ராபி சிறப்பு பருவத்தில் சாகுபடி செய்யப்படும் மக்காச்சோளம், பருத்தி மற்றும் நெல் சம்பா ஆகிய பயிர்கள் எதிர்பாராத இயற்கை இடர்பாடுகளால் பாதிக்கப்படும்போது விவசாயிகளுக்கு இழப்பீட்டுத் தொகை வழங்கிடவும் நிலையான வருமானம் கிடைக்கச் செய்து, அவர்கள் விவசாயத்தில் நிலைபெற செய்யவும், பிரதம மந்திரி பயிர் காப்பீட்டு திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. பிரதம மந்திரி பயிர் காப்பீட்டு திட்டம் ஆனது சேமா ஜெனரல் இன்சூரன்ஸ் என்ற நிறுவனம் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் கீழ் ஏக்கருக்கு மக்காச்சோளம் பிரிமியம் தொகை ரூ.491, பருத்திக்கு ரூ.691, நெல் சம்பாவுக்கு ரூ.580 ஆகும். இதில் மக்காச்சோளம், பருத்தி பயிருக்கு அக்டோபர் 31 மற்றும் நெல் பயிருக்கு நவம்பர் 15 ஆகிய தேதிக்குள் பிரிமியம் தொகை செலுத்தி பயிர் காப்பீடு செய்து கொள்ளலாம்.

இத்திட்டத்தில் இணைய விவசாயிகள் முன்மொழிவு படிவத்துடன் நடப்பில் உள்ள வங்கி கணக்கு புத்தகத்தின் முதல் பக்க நகல், ஆதார் அட்டை நகல், சிட்டா மற்றும் நடப்பு பசலி அடங்கல் ஆகிய ஆவணங்களுடன் அருகில் உள்ள தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள், தேசிய மயமாக்கப் பட்ட வங்கிகள் மற்றும் பொது சேவை மையங்கள் மூலமாக உரிய பிரிமியம் தொகையை செலுத்தி பயிர் காப்பீடு செய்து பயன்பெறலாம் என தெரிவித்துள்ளார்.

மேலும் விவரங்களுக்கு உழவர் செயலி அல்லது கெங்கவல்லி மற்றும் தம்மம்பட்டி வேளாண்மை விரிவாக்க மையத்தின் மூலம் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறார்.

# அயிகுடி கிராமத்தில் மாணவர்களால் பங்கேற்பு ஊரக மதிப்பீடு பணி மேற்கொள்ளப்பட்டது



தென்காசி, அக்.7

கலசலிங்கம் பல்கலைக்கழகம் நிறுவனத்தின் இறுதியாண்டு பி.எஸ்சி. தோட்டக்கலை மாணவர்கள், ஊரக தோட்டக்கலைப் பணி அனுபவத் திட்டம் (RHWE) சார்பில் மாணவிகள் காவியா வெற்றிவேலன், ஹரிதா ஸ்ரீ, சோபிகா மற்றும் மேகனா ஆகியோர், PRA களப்பயிற்சியை மேற்கொண்டனர்.

தென்காசி மாவட்டம், அயிகுடி கிராமத்தில் மாணவர்களால் பங்கேற்பு ஊரக மதிப்பீடு (Participatory Rural Appraisal – PRA) செயல்பாடு மேற்கொள்ளப்பட்டது. இச்செயல்பாட்டின் மூலம் கிராம மக்களின் சமூக அமைப்பு, வாழ்வாதாரம், அன்றாட நடவடிக்கைகள் மற்றும் கிராமத்தின் முக்கிய தேவைகள் குறித்து நேரடியாக அறிந்து கொள்ளப்பட்டது. PRA செயல்பாட்டில் சமூக வரைபடம் (Social Mapping), இயக்க வரைபடம் (Mobility Mapping), அன்றாட நடவடிக்கை அட்டவணை (Daily Activity Schedule) மற்றும் செல்வநிலை வகைப்படுத்தல் (Wealth Ranking) ஆகிய கருவிகள் பயன்படுத்தப்பட்டன. சமூக வரைபடம் மூலம் கிராமத்தின் குடியிருப்பு மற்றும் முக்கிய வசதிகள் கண்டறியப்பட்டன. இயக்க வரைபடம் மூலம் மக்கள் பொதுவாகச் செல்லும் இடங்கள் மற்றும் அவர்களின் பயண முறைகள் அறியப்பட்டன. அன்றாட நடவடிக்கை அட்டவணை மூலம் மக்களின் தினசரி பணிகள் மற்றும் நேரப் பயன்பாடு பதிவு செய்யப்பட்டது. செல்வநிலை வகைப்படுத்தல் மூலம் குடும்பங்களின் பொருளாதார நிலை குறித்து புரிந்து கொள்ளப்பட்டது.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**

# இயற்கை வேளாண்மை மற்றும் இயற்கை விவசாய பயிற்சி



கடலூர், அக்.7

கடலூர் மாவட்டம், கம்மாபுரம் வட்டாரம், அட்மா திட்டம் சார்பாக கோமாவிடந்தால் கிராமத்தில் இயற்கை வேளாண்மை / இயற்கை விவசாயம் பற்றி பயிற்சி நடைபெற்றது. வேளாண்மை உதவி இயக்குனர் சுபா, கலந்து கொண்டு விவசாயிகளுக்கு அரசு திட்டங்கள் பற்றி கூறினார். வேளாண் அறிவியல் நிலையம் பேராசிரியர் சுஜித் வேலு, விவசாயிகளுக்கு இயற்கை முறை சாகுபடி முறைகள் தொழில் நுட்பங்கள் மற்றும் சந்தேகங் களுக்கு விவசாயிகளுக்கு பயிற்சி அளித்தனர். பயிற்சியில் உதவி வேளாண்மை அலுவலர் ராபட், வட்டார தொழில்நுட்ப மேலாளர் தங்கதுரை, உதவி தொழில் நுட்ப மேலாளர்கள் ரமேஷ், பஞ்சமூர்த்தி மற்றும் விவசாயிகள் கலந்து கொண்டார்கள்.

# தேனீ வளர்ப்பு கட்டண பயிற்சி

மதுரை, அக்.7

மதுரை வேளாண்மை அறிவியல் நிலையத்தில் விவசாயிகள் மற்றும் தொழில் முனைவோருக்கு தேனீ வளர்ப்பு குறித்த ஒரு நாள் பயிற்சி அளிக்கப்படுகிறது.

இப்பயிற்சியில் தேனீயின் வகைகள், இந்திய மற்றும் இத்தாலிய தேனீ வளர்ப்பு நுட்பங்கள் மற்றும் இயற்கையில் வளர கூடிய கொசு மற்றும் கொம்பு தேனீக்களை பிடித்து வளர்த்தல் தேன் எடுத்தல் பற்றி செயல் முறை விளக்கம் அளிக்கப்படுகிறது. மேலும் தேனில் இருந்து மதிப்புகூட்டிய பொருட்கள் தயாரித்தல் மற்றும் அவற்றை சந்தை படுத்துதல் பற்றியும் பயிற்சி அளிக்கப்படும். இந்த மாத பயிற்சியானது அக்டோபர் 9 ஆம் தேதி நடைபெறுகிறது, கட்டணம் உண்டு. சான்றிதழ் வழங்கப்படும்.

தொடர்புக்கு : முனைவர். கி.சுரேஷ், திட்ட ஒருங்கிணைப்பாளர், வேளாண் அறிவியல் நிலையம், வேளாண் கல்லூரி, மதுரை. WhatsApp No. : 99652 88760

Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்** நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்** ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்** தரத்திற்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்**–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- **67 GRADE மூலப்பொருட்கள்** அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக** ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING** விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்** ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
**Rithvik Pipe Company**, Opp Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**

# விதைகளை பரிசோதிக்க விவசாயிகளுக்கு அழைப்பு!

திருவண்ணாமலை, அக்.7

தற்போது வட கிழக்கு பருவ மழை தொடங்க இருப்பதால் சில இடங்களில மிதமாகவும் மற்றும் சில இடங்களில் அதிக அளவில் மழை பெய்து கொண்டு இருப்பதால் விவசாயிகள் தங்களிடம் உள்ள விதைகள் ADT (R) 45, ADT 37, CO 51 மற்றும் மணிலா, உளுந்து போன்ற விதைகளை விதைப்பிற்கு முன் விதைகளின் தரத்தினை பரிசோதனை செய்து கொள்ளலாம். விதைகளை பரிசோதனை செய்வதன் மூலம் இடுபொருட்கள் செலவினை குறைத்து தரமான விதைகளை பயன்படுத்தி அதிக மகசூல் பெற வேண்டும். குறைந்த செலவில் அதிக மகசூல் பெற விதை பரிசோதனை செய்தபின் விதைகளை பயன்படுத்துவதன் மூலம் விதைகளின் முளைப்புதிறன் குறைபாடு இல்லாமல் இருப் பதையும் விதைகளில் பிற இரக விதைகள் உள்ளதா என்பதை அறிவதன் மூலம் கலப்பு விதைகள் பயன்படுத்துவதை தவிர்க்கலாம். மேலும் விதையின் ஈரப்பதம் மற்றும் சுத்தத் தன்மை ஆகியவற்றை அறிந்து பயன்படுத்துவதன் மூலம் பயன் படுத்தும் விதைகள் முளைக்க தரமானதா என்பதை தெரிந்து கொள்ளலாம். திருவண்ணா மலை மாவட்டத்தில் செயல்பட்டு வரும் அரசு விதைப் பரிசோதனை நிலையத்தில் விவசாய பெருமக்கள் தங்களிடம் உள்ள விதைகளை அனுப்பி அவற்றின் ஈரப்பதம், பிறஇரக கலவன், முளைப்புத்திறன், புறத் தூய்மை மற்றும் பூச்சி நோய் தாக்குதல் ஆகியயனவற்றை பரிசோதனை செய்து அதன்பின்பு விதைப்பு செய்து அதிக மகசூல் பெற்று கூடுதல் லாபம் பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றது. விதை மாதிரிகளை நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ அனுப்பி வைக்கலாம். விதைகளை அனுப்பும் போது பயிரின் பெயர், இரகம் மற்றும் குவியல் எண் ஆகியவை குறிப்பிட்ட விண்ணப்ப படிவத்துடன் ஒரு மாதிரிக்கு ரூபாய் 80/- வீதம் விதைப்பரிசோதனைக் கட்டணம் சேர்த்து அனுப்புதல் வேண்டும். விதை மாதிரிகளை மூத்த வேளாண்மை அலுவலர், விதைப்பரிசோதனை நிலையம், டாங்காப் கட்டிடம், வேங்கிக்கால், திருவண்ணாமலை 606 604 என்ற முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

# கொண்டைக்கடலை – விதை உற்பத்தி தொழில்நுட்பம் மற்றும் விதை பரிசோதனையின் அவசியமும்

இப்பயிர் பனி பொழிவு காலத்தில் தமிழ்நாட்டில் சராசரியாக 6068-73 எக்டர் பரப்பளவிலும் திருப்பூர் மாவட்டத்தில் 3773 ஏக்கர் பரப்பளவிலும் பயிரிடப்படுகிறது. கோயம்புத்தூர், திருப்பூர் மற்றும் தர்மபுரி மாவட்டங்களில் பரவலாகவும். ஈரோடு, சேலம், திண்டுக்கல் மற்றும் விருதுநகர் மாவட்டங்களில் கரிசல் மண் பகுதிகளிலும் பயிரிடப்படுகிறது. கொண்டைக்கடலையில் தேசி மற்றும் காபுலி கடலை என்னும் இரு வகைகள் உள்ளன. தேசி வகை சிறியதாகவும் காபுலி வகை கடலை வெள்ளையாகவும், அளவில் பெரியதாகவும் இருக்கும். தமிழ்நாட்டில் தேசி கடலை வகை கோ 1, கோ 2, கோ 3 மற்றும் கோ 4 தற்போது பரவலாக பயிரிடப்படுகிறது.

**பருவம் மற்றும் இரகங்கள்**

| ***மாவட்டம் / பருவம்*** | ***இரகங்கள்*** |
|---|---|
| ***நவம்பர் (குளிர்காலம்) மானாவாரி*** | |
| வேலூர், திருவண்ணாமலை, சேலம், நாமக்கல், திருச்சிராப்பள்ளி, பெரம்பலூர், கரூர், தர்மபுரி, புதுக்கோட்டை, ஈரோடு, கோயம்புத்தூர், திருப்பூர், மதுரை, தேனி, திண்டுக்கல், விருதுநகர், சிவகங்கை, இராமநாதபுரம், திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி | கோ 3 மற்றும் கோ 4 வயது (85நாட்கள்) |

**விதை உற்பத்திக்கான தொழில் நுட்பங்கள் மற்றும் பயிர் மேலாண்மை**



**நிலம் தயாரித்தல்**

விதை உற்பத்திக்குத் தேர்வு செய்யப்பட்ட நிலம் தான் தோன்றிப் பயிர் அற்றதாக இருத்தல் வேண்டும். அதாவது தேர்ந்தெடுக்கப்பட்ட நிலத்தில் கடந்த பருவத்தில் பிற மற்றும் அதே இரகப் பயிர் பயிரிடப்பட்டிருக்கக் கூடாது. அவ்வாறு பயிரிடப் பட்டிருந்தால் சான்றளிப்புத் துறையினால் சான்றளிக்கப்பட்ட அதே இரகமாக இருத்தல் வேண்டும். நிலத்தை 3 4 முறை புழுதிபட நன்கு உழ வேண்டும். கடைசி உழவின் போது ஏக்கருக்கு 5 டன் என்ற அளவில் தொழு உரம் இடவேண்டும்.

**விதை அளவு :** கோ 3 : 36 கிலோ / ஏக்கருக்கு, கோ 4 : 30 கிலோ / ஏக்கருக்கு

**பயிர் இடைவெளி :** தேசி இரகத்திற்கு செடிக்கு செடி 10 செ.மீ. இடைவெளி மற்றும் வரிசைக்கு வரிசை 30 செ.மீ. இடைவெளி விடவேண்டும். காபுலி இரகத்திற்கு செடிக்கு செடி 15 செ.மீ. மற்றும் வரிசைக்கு வரிசை 45 செ.மீ. இடைவெளி விடவேண்டும்.

**பயிர் விலகு தூரம் :** விதை உற்பத்திக்கு விதைப் பயிரானதுஇ பிற இரகம் மற்றும் சான்று பெறாத அதே இரகத்திலிருந்து வயலைச் சுற்றிலும் 5 மீட்டர் இடைவெளி விட்டு இருத்தல் வேண்டும்.

**விதைப்பு முன் விதை நேர்த்தி :** விதைகளை 1 சதவீத பொட்டாசியம் டை ஹைட்ரஜன் பாஸ்பேட் கரைசலில், ஒரு பங்கு கரைசலில் 3 பங்கு விதை என்ற அளவில் 3 முதல் 4 மணி நேரம் ஊற வைத்துப் பின் நிழலில் உலர்;த்தி விதைகளை விதைப்பிற்குப் பயன்படுத்துதல் வேண்டும். பயறு வண்டு தாக்கிய விதைகளை விதைப்பிற்குப் பயன்படுத்துதல் கூடாது.

**அறுவடை :** விதைகளை பூத்த 35-40 நாட்களுக்குள் வினை யியல் முதிர்ச்சி அடைகின்றன. பயிரில் 70 முதல் 80 சத காய்கள் பழுப்பு நிறம் அடைந்தவுடன் பயிரினை அறுவடை செய்யலாம்.

**விதைச் சுத்திகரிப்பு :** விதைகள் இரகங்களுக்கு ஏற்றவாறு 13/64‘ (5.3 மி.மீ) அல்லது 18/64‘ (7.2 மி.மீ) வட்ட கண் அளவு கொண்ட சல்லடைகளைக் கொண்டு சலித்து நல் விதைகளைப் பிரித்து எடுக்க வேண்டும். விதைகளை 8 முதல் 10 சத ஈரப்பதத்திற்கு உலர்த்த வேண்டும்.

**அறுவடைக்கு பின் விதை நேர்த்தி :** விதைகளை திரம் அல்லது கார்பென்டசிம் மருந்தினை ஒரு கிலோவிற்கு 2 கிராம் என்ற அளவில் 5 மி.லி. தண்ணீருடன் சேர்த்து விதை நேர்த்தி செய்ய வேண்டும் (அல்லது) விதைகளுடன் ஹாலோஜன் கலவையை (கால்சியம் ஆக்ஸி குளோரைடு, கால்சியம் கார்பனேட் மற்றும் அரப்புத் தூள் 5:4:1 என்ற விகிதத்தில் கலந்த கலவை) ஒரு கிலோவிற்கு 3 கிராம் என்ற அளவில் கலந்தும் விதை நேர்த்தி செய்-யலாம் (அல்லது) விதை மற்றும் தானிய முறை சேமிப்பிற்காக விதைகளை ஒரு கிலோ விதைக்கு 10 கிலோ என்ற அளவில் ஊக்குவிக்கப்பட்ட களி மண்ணினை உலர் கலவையாக கலந்து விதை நேர்த்தி செய்யலாம்.

**விதைச் சேமிப்பு :** விதைகளின் ஈரப்பதத்தினை 8 முதல் 9 சதமாகக் குறைத்து பின் சாக்கு அல்லது துணிப் பைகளில் குறுகிய கால சேமிப்பிற்காக (8-9 மாதங்கள்) சேமித்து வைக்கலாம். விதைகளின் ஈரப்பதத்தினை குறைத்து பின் உள்உறை கொண்ட

சாக்குப் பைகளில் மத்திய, இடைக்கால சேமிப்பிற்காக (12–15 மாதங்கள்) சேமித்து வைக்கலாம்.

**விதைப்பரிசோதனையின் அவசியம் :** கொண்டைக்கடலை பயிரினை வருடத்திற்கு ஒரு முறையே பயிரிடுவதன் காரணமாக விதை இருப்புக் காலம் அதிகமாக உள்ளதால், விதைப்பு செய்வதற்கு முன் விதைப்பரிசோதனை செய்து பயிரிட்டால், போதுமான பயிர் எண்ணிக்கை பராமரித்து சிறந்த மகசூல் பெற முடியும். விவசாயிகள் தங்களிடமுள்ள கொண்டைக்கடலை விதையின் தரத்தினை அறிந்திட அந்தந்த மாவட்டங்களில் செயல்பட்டுக் கொண்டுள்ள விதைப்பரிசோதனை நிலையங்களில் ஒரு கிலோ விதையினை ரூ.80/– (ரூ. எண்பது மட்டும்) பரிசோதனை கட்டணமாக செலுத்தி பயன்பெறுமாறு திருப்பூர் விதைப்பரிசோதனை நிலைய மூத்த வேளாண்மை அலுவலர் சி.வசந்தி மற்றும் வேளாண்மை அலுவலர் ஜோ.மோ.அறிவுமதி ஆகியோர் தெரிவிக்கிறார்கள்..




# அகத்தி சாகுபடி - ஒரு பார்வை



அகத்தி மரம் அனைத்து மண்ணிலும் வளரும். வெற்றிலை மற்றும் மிளகு கொடிகள் படர்வதற்காகவும் கீரை சாகுபடிக்காகவும் அகத்தி பயிரிடப்படுகிறது.

## அகத்தியின் சிறப்பு

இதனுடைய அறிவியல் பெயர் (SESBANIA GRANDIFLORA). லேசான மரவகை பயிர்களில் இதுவும் ஒன்று. அகத்திக்கு கிளைகள் கிடையாது, வேகமாக வளரக்கூடிய குறுகிய காலம் மட்டும் வாழக்கூடியது. நுனியை 3 அடி உயரம் வளர்ந்த பிறகு ஒடித்து விட்டால் புதர் போல அகலமாக வளர்ந்து அதிகமான இலைகள் தரும். ஒடித்து விடாமல் இருந்தால், நேராக சுமார் 25 அடி உயரம் வரை வளரக்கூடியது. இதனுடைய இலைகள் எதிர் திசையில் வரிசையாக இருக்கும். இலைகள் 15-30 செ.மீ நீளம் உடையது.

## இலை அமைப்பு?

ஒரு இலையில் 40-80 சிறு இணுக்குகள் இருக்கும். ஒரு இணுக்கு 1.5 செ.மீ முதல் 3.0 செ.மீ நீளத்தில் இருக்கும். இதனுடைய இலைகள், பூக்கள் கீரையாக சமையலுக்கு பயன்படுத்தப்படுகிறது. அகத்தியின் பூக்கள் சிவப்பு மற்றும் வெள்ளை நிறத்தில் இருக்கும்.

## அகத்தி விதை

அகத்தியின் காய்கள் லேசாக நீளமாக பீன்ஸ் போன்றே இருக்கும். இவை முற்றியதும் விதைகள் வெடித்து சிதறும் தன்மையுடையது. விதை 8மி.மீ நீளத்தில் இருக்கும். ஒரு கிலோ விதையில் 15000-16000 விதைகள் இருக்கும். விதைகள் ஒரு வருடம் வரை முளைப்பு தன்மையை தக்க வைத்துக் கொள்ளும். முளைப்புதிறன் 80-90% வரை இருக்கும்.

### அகத்தி சாகுபடி

விதைகளை 1.8 மீ இடைவெளியில் 30 செ.மீ ஆழத்தில் நேரடியாக விதைக்க வேண்டும். அகத்தி விதைக்கப்பட்ட 6-8 மாதங்களில் அறுவடைக்கு தயாராகி விடும். அதன்பின் 60-80 நாட்களுக்கு ஒரு முறை இலைகள் அறுவடை செய்யப் படுகிறது. அகத்தி இலை ஆடு, மாடுகளுக்கு சிறந்த தீவன மாகும். விவசாயிகள் தங்களுடைய தேவைக்கேற்ப அரை ஏக்கர், கால் ஏக்கர் கணக்கில் நீர்ப்பாசன பகுதியில் பயிரிடு கின்றனர்.

### பூச்சி/ நோய் மேலாண்மை

அகத்தியில் பூச்சி நோய் தாக்குதல் அவ்வளவாக இருக்காது. அசுவினி தாக்குதல் வரலாம். அதனை கட்டுப்படுத்த வேப்பங்கொட்டை சாறு 5% தெளிக்கலாம்.

குறைந்த செலவிலே, நிறைந்த வருமானம் தரக்கூடிய ஒரே பயிர் அகத்தி மட்டுமே. இலைகள், விதைகள் அனைத்துமே வருமானம்.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**

## மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!



# அஸ்வகந்தா தொடர்பான ஒரு நாள் சிறப்பு பயிற்சி நிகழ்ச்சி



திண்டுக்கல், அக்.7

திண்டுக்கல் மாவட்டம், வேடசந்தூரில் இயங்கி வரும் ICAR தேசிய வணிக வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்தில் (ICAR–NIRCA), 07.10.2026 (புதன்கிழமை) அன்று வணிக மூலிகைப் பயிரான அஸ்வகந்தா தொடர்பான ஒருநாள் சிறப்பு பயிற்சி நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து விவசாயிகள், தொழில்முனைவோர்கள் உள்ளிட்ட பலர் ஆர்வத்துடன் பங்கேற்றனர்.

நிகழ்ச்சியில் நிலையத்தின் தொழில்நுட்ப உதவியாளர் கார்த்திக் வரவேற்புரையாற்றினார். தொடர்ந்து, உழவியல் துறை விஞ்ஞானி முனைவர் குமரேசன், அஸ்வகந்தா பயிரின் உழவியல் மற்றும் நவீன சாகுபடி தொழில்நுட்ப முறைகள் குறித்து விளக்கினார். நூற்புழுவியல் துறை விஞ்ஞானி முனைவர் வெங்கடேசன் அஸ்வகந்தா பயிரில் ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு மற்றும் நூற்புழு மேலாண்மை தொழில்நுட்பங்கள் குறித்து பயனுள்ள தகவல்களை வழங்கினார்.

தொடர்ந்து, நிலையத்தின் தலைவர் மற்றும் பயிர்ப் பெருக்கவியல் விஞ்ஞானி முனைவர் மணிவேல், அஸ்வகந்தா பயிர் தொடர்பான பல்வேறு தொழில்நுட்ப விளக்கங்களை வழங்கியதுடன், அதன் மதிப்புக் கூட்டல், ஏற்றுமதி வாய்ப்புகள், சந்தைப்படுத்தல் மற்றும் வணிக சாத்தியக்கூறுகள் குறித்தும் விரிவாக எடுத்துரைத்தார். இதன் மூலம் பங்கேற்ற விவசாயிகள் மற்றும் தொழில் முனை வோர்கள் அஸ்வகந்தா சாகுபடி மற்றும் வணிகம் தொடர்பான பல்வேறு பயனுள்ள தகவல்களைப் பெற்றனர்.

இறுதியாக, ஆராய்ச்சியாளர்கள் விவசாயிகள் கலந்துரையாடல் நடைபெற்றது. இதில் பங்கேற்ற விவசாயிகள் தங்களது சந்தேகங்கள் மற்றும் நடைமுறை சாகுபடி சார்ந்த கேள்விகளை முன்வைத்தனர், ஆராய்ச்சியாளர்கள் அவற்றிற்கு விளக்க மளித்தனர். இதனையடுத்து, பயனுள்ள மற்றும் சிறப்பான முறையில் நிகழ்ச்சி இனிதே நிறைவுற்றது.

கல்யாண்
ஜுவல்லர்ஸ்



Toll Free No. 1800 - 4257333

# எல்-நினோ மற்றும் மழை நீர் பற்றாக்குறைக்கான மாற்றுத் திட்ட பயிர் சாகுபடி முறைகள்

திருவள்ளூர், அக்.7

திருவள்ளூர் வட்டார விவசாய பெருமக்களுக்கு நடப்பு ஆண்டில் வழக்கமாக பெய்ய வேண்டிய மழையளவில் சுமார் 55% குறைவாக கிடைக்க பெற்றமையாலும் எல்-நினோ என்ற காலநிலை பாதிப்பிலிருந்து தற்போது உள்ள நெல், கரும்பு, நிலக்கடலை மற்றும் பயறு வகைப் பயிர்களைப் பாதுகாக்கவும், வரும் பருவங்களில் கடைப்பிடிக்கப்பட வேண்டிய முன்னேற் பாடுகளாக நம் மாவட்டத்தில் திரூரில் உள்ள தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழக விஞ்ஞானிகளின் பரிந்துரை களையும், சென்ற வாரம் வேளாண் இயக்குநர் அலுவலகத்தின் காணொளி மூலம் நடைபெற்ற ஒன்றிய அரசில் பணிபுரியும் விஞ்ஞானிகளின் பரிந்துரைகளையும் கருத்தில் கொண்டு விவசாயிகள் கீழ்கண்ட முன்னெச்சரிக்கைகளைக் கடைப்பிடிக்க கேட்டுக்கொள்ளப்படுகிறது.

பொதுவாக கிடைக்கப்பெறும் மழையினை நன்கு பயன் படுத்திக் கொள்ள ஏதுவாகவும் நீரைச்சேமிக்கவும் ஏரி மற்றும் குளங்களை உடன் தூர்வாருதல் வேண்டும். விவசாய நிலங் களில் பண்ணைக் குட்டைகளை அமைத்து மழை நீரைச் சேமிக்கலாம்.

**நெல் :** வறட்சியைத் தாங்கி வளரக்கூடிய நெல் இரகம் வீலுனி 15 தேர்வு செய்து ஆகஸ்ட் முதல் டிசம்பர் வரை பயிரிடலாம். விதை கடினப்படுத்த பொட்டாசியம் குளோரைட் 1% (1 லிட்டர்க்கு 1 கிலோ) கரைசலில் நெல் விதையை 16 மணி நேரம் ஊறவைத்து ஊறிய விதைகளை வடிகட்டி, நிழலில் பரப்பி விதைப்பதற்கு முந்தைய இயல்பான ஈரப்பதம் வரும் வரை உலர்த்தி விதைக் கவும். இதனால் விதைகளின் முளைப்புத்திறன் அதிகரிக்கிறது. வறட்சியான நீர் பற்றாக்குறை காலநிலையிலும் நாற்றுகள் வேர் பிடித்து நன்கு வளரும். வளர்ச்சி பருவத்தில் 1% (PPFM) பிங்க் நிற பாக்டீரியம் அல்லது 1% டிஏபி + 1% பொட்டாசியம் குளோரைடு தெளிக்கவும். காய்ச்சலும் பாய்சலுமாக 2 இன்ச் உயரத்திற்கு நீர் கட்டுதல் வேண்டும். முக்கிய பருவங்களான வளர்ச்சிப் பருவம், கதிர் உருவாகும் பருவம் மற்றும் மணி பிடிக்கும் பருவத்தில் கட்டாயமாக நீர்பாய்ச்சவும். ஒருங்கிணைந்த களை மேலாண் மையைக் கடைப்பிடிக்கவும்.

பூக்கும் தருணத்தில் பூக்கும் திறனை அதிகரிக்கவும், கதிர்மணி வெளிவரும் தருணத்தில் மகசூலை அதிகரிக்கவும், தமிழ்நாடு வேளாண் பல்கலைக் கழகத்தில் உருவாக்கப்பட்ட Pay Bloom என்ற பயிர் ஊக்கிகளை ஏக்கருக்கு 6 கிலோ என்ற அளவில் 10 நாட்கள் இடைவெளியில் தெளிக்கவும் அல்லது 1% யூரியா + 2% டிஏபி + 1% பொட்டாசியம் குளோரைட் கரைசலை கதிர் பிடிக்கும் பருவத்தில் 10 நாட்கள் இடைவெளியில் தெளிக்கவும்.

சமச்சீர் உரமிடுதலை கடைப்பிடிக்கவும். மேலுரத்தினை 3 தவணைகளில் 25 கிலோ தழைச்சத்து உடன் 12.5 கிலோ சாம்பல் சத்து உரத்தினை நட்ட 22-25, 40-45 மற்றும் 65 நாட்களில் இடவேண்டும். மண் நீர் பிடிப்பு திறனை மேம்படுத்த தொழு உரம் இடுதல் வேண்டும். வயல் வரப்புகளை நன்கு பலப்படுத்தி வெடிப்புகள் இல்லாமல் பூசி வர நீர் கசிவு (Seepage) இழப்பினைத் தவிர்க்கலாம். அதிக தழைச்சத்து உரமிடுதலைத் தவிர்த்து பூச்சி நோய் கண்காணிப்பு செய்ய வேண்டும்.

இதனை திருவள்ளூர் வேளாண்மை உதவி இயக்குநர், ந.தெய்வேந்திரன் தெரிவித்தார்.

## அரசு வேளாண் கல்லூரி மாணவர்கள் நன்னிலம் வேளாண் அலுவலகத்தில் களப் பயிற்சி



நாகப்பட்டினம், அக்.7

நாகப்பட்டினம் மாவட்டம், கீழ்வேளூரில் இயங்கி வரும் வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் இறுதியாண்டு மாணவர்கள் 11 பேர் கிராமப்புற வேளாண் பணி அனுபவத் திட்டத்தின் முதல் நாளை நன்னிலம் வட்டார ஒருங்கிணைந்த வேளாண்மை விரிவாக்க மையத்தில் தொடங்கினர். இத்திட்டத்தின் மூலம் கிராமப்புற விவசாயிகளுடன் தொடர்பு ஏற்படுத்தப்பட்டு அவர்களால் மேற்கொள்ளப்படும் பயிர் சாகுபடி முறைகள் வேளாண் நடைமுறைகள் மற்றும் நவீன வேளாண் தொழில்நுட்பங்கள் குறித்து நேரடியாக அறிந்து கொள்ளும் வாய்ப்பு மாணவர்களுக்கு வழங்கப்படுகிறது. மேலும், விவசாயிகளால் எதிர்கொள்ளப்படும் பல்வேறு வேளாண் பிரச்சனைகள் நேரடியாக கேட்டறியப்பட்டு அவற்றுக்கான தொழில்நுட்ப ரீதியாக தீர்வுகள் மற்றும் பொருத்தமான வேலை முறைகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட உள்ளது.

# இப்கோ உரச் சீர்திருத்த விழிப்புணர்வு விழா

ஈரோடு, அக்.7

ஈரோடு மாவட்டம், மாத்தூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கத்தில், இப்கோ கள அலுவலர் வினோத் தலைமையில் உரச் சீர்திருத்த விழிப்புணர்வு விழா நடைபெற்றது. இந்நிகழ்வில் 70-க்கும் மேற்பட்ட விவசாயிகள் பங்கேற்றனர்.

இந்நிகழ்ச்சியில், சமச்சீர் உரப் பயன்பாடு, மண் வளப் பாதுகாப்பு, நானோ உரங்களான நானோ யூரியா, நானோ டி.ஏ.பி, நானோ ஜிங்க், நானோ காப்பர், சாகரிகா மற்றும் உயிர் உரங்களின் பயன்பாடு, இரசாயன உரங்களின் பயன்பாட்டைக் குறைப்பதன் அவசியம் ஆகியவை குறித்து விவசாயிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

மேலும், விவசாயிகளின் நலன் மற்றும் மண் வளத்தை மேம்படுத்தும் நோக்கில் உரத் துறையில் மேற்கொள்ளப்பட்ட முக்கியச் சீர்திருத்தங்கள் மற்றும் UTSAV சீர்திருத்தங்களின் கீழ் மேற்கொள்ளப்பட்ட 10 முக்கிய நடவடிக்கைகள் குறித்தும் விவசாயிகளுக்கு விளக்கமளிக்கப்பட்டது.

தொடர்ந்து, ட்ரோன் தொழில்நுட்பம் மற்றும் சங்கட் ஹரன் பீமா யோஜனா திட்டம் ஆகியவற்றின் பயன்பாடுகள் குறித்தும் விவசாயிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

மண் வளத்தைப் பாதுகாத்து, உரப் பயன்பாட்டைச் சீரமைத்து, நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி நிலையான வேளாண்மையை மேம்படுத்தும் நோக்கில் இவ்வுரச் சீர்திருத்த விழிப்புணர்வு நிகழ்வு நடத்தப்பட்டது.





# விருதுநகர் மாவட்டத்திற்குரிய வறட்சி மேலாண்மை வேளாண் தொழில்நுட்பங்கள்

விருதுநகர், அக்.7

காலநிலை மாற்றத்தின் காரணமாக மழைப்பொழிவில் ஏற்படும் கால மற்றும் இடமாறுபாடுகள், நீண்டகால மழை யின்மை, அதிக வெப்பநிலை மற்றும் மண்ணின் ஈரப்பதக் குறைவு ஆகியவை வறட்சியின் தாக்கத்தை மேலும் அதிகரிக் கின்றன.






குறிப்பாக மானாவாரி வேளாண்மையில் வறட்சி நேரடியாக பயிர் வளர்ச்சி, மகசூல் மற்றும் விவசாயிகளின் வருமானத்தை பாதிக்கிறது. எனவே, குறைந்த நீரை திறம்படப் பயன்படுத்தி பயிர் உற்பத்தியைப் பாதுகாப்பதற்கான வறட்சி மேலாண்மை தொழில்நுட்பங்களைப் பின்பற்றுவது மிகவும் அவசியமாகும். அதிக அளவு மானாவாரி சாகுபடி செய்யப்படும் விருதுநகர் மாவட்டத்தில் குறைந்த நீரில் அதிக மகசூல் என்ற நோக்குடன் மழைநீரைச் சேமித்தல், மண் ஈரப்பதத்தைப் பாதுகாத்தல், வறட்சியைத் தாங்கும் ரகங்களைத் தேர்வு செய்தல், சரியான விதைப்பு மற்றும் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை ஆகியவற்றை கடைப்பிடித்து வறட்சியினால் ஏற்படும் தாக்கத்தை குறைக்கலாம்.

வறட்சி நிலைமையில் மண்ணில் கிடைக்கும் குறைந்த நீரை திறம்படப் பயன்படுத்தி, பயிரின் வளர்ச்சியையும் மகசூலையும் பாதுகாப்பதே வறட்சி மேலாண்மையின் முக்கிய நோக்கமாகும்.

**வறட்சிக்கேற்ற பயிர் தேர்வு**

- குறுகிய கால பயிர்களான உளுந்து, பாசிப்பயறு பயிர் செய்தல்
- சோளம், மக்காச்சோளம்,கம்பு போன்ற வறட்சி தாங்க கூடிய பயிர்களை பயிர் செய்தல்
- காலநிலை மாற்றத்தை தாங்கி வளரக்கூடிய சிறு தானிய பயிர்களான தினை, சாமை, குதிரைவாலி, பனிவரகு பயிர் செய்தல்
- எண்ணெய் வித்து பயிர்களில் எள், சூரியகாந்தி மற்றும் கடலை பயிர் செய்தல்

**வறட்சிக்கேற்ற குறுகியகால பயிர் ரகங்கள்**

- நெல் – கோ 53, ஆடுதுறை 53 அண்ணா R 4, டிகேம் 15
- உளுந்து – வம்பன் 8, வம்பன் 11, வம்பன் 12
- பாசிப்பயறு – வம்பன் 5, வம்பன் 7, கோ 8, கோ 9
- பருத்தி – விபிடி 2, விபிடி 3, எஸ்விபிஆர் 7
- சோளம் – கே 12, கே 13, கோ 34
- மக்காச்சோளம் – கோ ஹெச் எம் 8, கோ ஹெச் எம் 11, கோ ஹெச் எம் 12, வி ஜி ஐஹெச் எம் 2

- குதிரைவாலி – மதுரை 1, அத்தியேந்தல் 1
- தினை – அத்தியேந்தல் 1, அத்தியேந்தல் 2
- சாமை – கோ 4, அத்தியேந்தல் 1
- வரகு – அத்தியேந்தல் 1
- பனிவரகு – அத்தியேந்தல் 1, அத்தியேந்தல் 2
- சூரியகாந்தி – கோ ஹெச் 3, கோ ஹெச் 4, கோ ஹெச் 5,கோ எஸ் எப் வி 5
- எள் – வி ஆர் ஐ 4, வி ஆர் ஐ 5

### முன்பருவ மழை விதைப்பு

முன்பருவ மழை விதைப்பு என்பது பருவமழை முழுமையாகத் தொடங்குவதற்கு முன் கிடைக்கும் முதல் பயனுள்ள மழையைப் பயன்படுத்தி, மண்ணில் போதுமான ஈரப்பதம் ஏற்பட்டவுடன் பயிர் விதைகளை விதைக்கும் முறையாகும். இது குறிப்பாக மானாவாரி வேளாண்மையில் வறட்சியைத் தவிர்க்க உதவும் முக்கியமான காலநிலைத் தாங்கும் தொழில்நுட்பமாகும். சோளம், கம்பு, கேழ்வரகு, மக்காச்சோளம், துவரை, உளுந்து, பாசிப்பயறு, நிலக்கடலை, எள், பருத்தி போன்ற மானாவாரி பயிர்களில் பொருத்தமான சூழ்நிலைக்கு ஏற்ப முன்பருவ மழை விதைப்பை மேற்கொள்ளலாம்.

### அகல சால் அகல பாத்தி முறை

அகல சால் அகல பாத்தி முறையில் உயரமான அகலப் பாத்திகளிலும் பயிரிடப்படுகிறது. இந்த முறை மழைநீரை திறம்படப் பயன்படுத்தவும், அதிகப்படியான நீரை வெளி யேற்றவும் உதவுகிறது. மண்ணில் நீர் தேங்குவதையும் குறைத்து, வேர் பகுதிக்கு ஏற்ற காற்றோட்டத்தை ஏற்படுத்துகிறது.

### வறட்சி தாங்கக்கூடிய பயிர் தொழில்நுட்பங்கள்

- விதைகளை பொட்டாசியம் குளோரைட் (அல்லது) பொட்டாசியம் பை கார்போனேட் கரைசலில் கடினப்படுத்தி விதைத்தல்
- விதை அமிர்தம் கலந்து விதைத்தல்
- வயலில் மூடாக்கு பயன்படுத்தி நீர் ஆவியாதலை குறைத்து மண்ணின் ஈரப்பதத்தை பாதுகாத்தல்
- 1.0 சதவீத பொட்டாசியம் குளோரைட் கரைசலை வறட்சி காலங்களில் பயிர்களில் தெளித்தல் (அல்லது)
- 1.0 சதவீத பிபிஎப்எம் கரைசலை வறட்சி காலங்களில் தெளித்தல்

மேற்கண்ட தொழில்நுட்பங்கள் காலநிலை மாற்றத்திற்கேற்ற நிலையான மற்றும் காலநிலைத் தாங்கும் வேளாண்மையை உருவாக்குவதற்கும், விவசாயிகளின் உற்பத்தி மற்றும் வருமானத்தைப் பாதுகாப்பதற்கும் முக்கிய பங்காற்றுகின்றன.

மேலும் வேளாண் பயிர்களில் வறட்சி மேலாண்மை குறித்த தகவலுக்கு அருப்புக்கோட்டை, கோவிலாங்குளம், வேளாண் அறிவியல் நிலைய மூத்த பேராசிரியர் மற்றும் தலைவரை அணுகலாம்.

# சுய உதவிக் குழு மூலம் மகளிர்களால் நடத்தப்படும் மசாலா தொகுப்பினை பார்வையிட்ட வேளாண் கல்லூரி மாணவிகள்




நாகப்பட்டினம், அக்.7

வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் நாகப்பட்டினத்தில் பயிலும் மாணவிகளால் கிராமப்புற வேளாண் பணி அனுபவத் திட்டமானது நீடாமங்கலம் ஒன்றியத்தில் மேற்கொள்ளப் பட்டது. இதில் மேலப்பூவனூர், கோவில் வெண்ணி, ஆதனூர் உள்ளிட்ட கிராமங்களில் சிறு, குறு மற்றும் பெண் விவசாயிகள் குறித்த செய்திகளை மாணவிகள் தொகுத்தனர். விவசாயிகள் பயன்படுத்தும் தொழில்நுட்ப முறைகள் குறித்தும் விவசாய பிரச்சனைகள் பற்றியும் கேட்டறிந்தனர். மேலும் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் மூலமாக மகளிரால் நடத்தப் படும் மசாலா தொகுப்பிற்குச் சென்று அதன் விவரங்களையும் கேட்டறிந்தனர். மூன்று சுய உதவிக் குழுக்களில் இருந்து 6 பெண்கள் மூலமாக கோவில் வெண்ணி ஊராட்சியில் நடத்தப்படுகிறது. இதற்கான செயல்முறை விளக்கங்களை NIFTEM தொழில்நுட்ப மூலமாக பயிற்சி பெற்றுள்ளனர்

## தலைக் கவசம் உயிர்க் கவசம்

Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்**
  நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்**
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்**
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்**
- **67 GRADE மூலப்பொருட்கள்**
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக**
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING**
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்**
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

### PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

### RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street,
Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
**Rithvik Pipe Company**, Opp Kamaraj Colony,
R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**

# உயிரியல் கட்டுப்பாட்டு மையத்தில் கீழ்வேளூர் வேளாண் கல்லூரி மாணவிகள் களப்பயிற்சி




நாகப்பட்டினம், அக்.7

நாகப்பட்டினம் மாவட்டம், கீழ்வேளூர் வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் இறுதியாண்டு மாணவிகள், தங்களது ஊரக வேளாண் அனுபவப் பயிற்சித் திட்டத்தின் (RAWE - Rural Agricultural Work Experience) ஒரு பகுதியாக மன்னார்குடியில் உள்ள உயிரியல் கட்டுப்பாட்டு மையத்திற்கு (Biocontrol Lab) இன்று களப்பயணம் மேற்கொண்டனர்.

இக்களப்பயணத்தின் போது, இரசாயனப் பூச்சிக்கொல்லிகளுக்கு மாற்றாக இயற்கை முறையில் பயிர் பாதுகாப்பு செய்யும் உயிரியல் கட்டுப்பாட்டு காரணிகளின் (Biocontrol Agents) உற்பத்தி மற்றும் செயல்முறைகளை மாணவிகள் நேரில் பார்வையிட்டுப் பயிற்சி பெற்றனர்.

குறிப்பாக, பயிர்களில் ஏற்படும் நோய்களைக் கட்டுப்படுத்தும் டிரைக்கோடெர்மா விரிடி (Trichodermaviride) மற்றும் சூடோமோனாஸ் புளோரசன்ஸ் (Pseudomonasfluorescens) ஆகிய நன்மை செய்யும் நுண்ணுயிரிகளை ஆய்வகத்தில் தாய் உள்கலவை (Mother culture) மூலம் பெருக்கம் செய்யும் முறைகள் குறித்துக் கேட்டறிந்தனர்.

மேலும், நெல் மற்றும் பருத்திப் பயிர்களைத் தாக்கும் பூச்சிகளைக் கட்டுப்படுத்தும் டிரைக்கோகிரம்மா (Trichogramma) ஒட்டுண்ணி கார்டுகள் தயாரிக்கும் நுட்பங்களையும், அவற்றை விவசாயிகளுக்கு விநியோகிக்கும் முறைகளையும் ஆய்வு செய்தனர்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**

# கரிசல் காட்டின் வெள்ளைத்தங்கமே

கரிசல் மண்ணின்
காய்ந்த உதடுகளில்
வெள்ளைச் சிரிப்பாய்
மலர்வது நீ!

விவசாயியின்
வியர்வையில்
விளைவது நீ!

நெசவாளியின்
விரல்களில்
நூலாவது நீ!

தறியின்
ஓசையில்
இசையாவது நீ!

மனிதனின்
மேனியில்
ஆடையாவது நீ!

கரிசல் மண்ணின்
கண்ணீரைத் துடைக்கும்
வெள்ளைத்தங்கமே!

விவசாயியின்
வாழ்வாதாரமே!

நெசவுத் தொழிலின்
உயிர்மூலமே!

நெசவாளியின்
உயிர்த்தொழிலே!

பட்ட மேனிக்கு
பஞ்சு ஆடையாய்
உலகைத் தழுவும்
இயற்கையின் கொடையே!

பருத்தி வாழ்க!
பருத்தி விவசாயி வாழ்க!
கரிசல் மண் வாழ்க!
நெசவாளர் வாழ்க!

தறியின் ஓசை வாழ்க!
உழைப்பின்
பெருமை வாழ்க!

உலக பருத்தி தினம் (World Cotton Day) ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் 7ஆம் தேதி கடைப்பிடிக்கப்படுகிறது. ஐக்கிய நாடுகள் சபை 2021ஆம் ஆண்டு இதை அதிகாரப்பூர்வமாக அங்கீகரித்தது.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**

இதன் நிரந்தர கருப்பொருள் Cotton for Good ஆகும்.

பருத்தி விவசாயியின் வாழ்வாதாரம், தொழில்துறையின் ஆதாரம், உலகின் இயற்கை நார்.

உலக பருத்தி தின வாழ்த்துகள்!

தகவல் தொகுப்பு : ***கா.அரிபுத்திரன், வேளாண்மை அலுவலர், உயிரியல் கட்டுப்பாட்டு ஆய்வகம், விருதுநகர்.***

## மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!

